www.tamilarangam.net


# புதிய பாதை

அன்பளிப்பு
தமிழீழத்தில் 1-50
தமிழகத்தில் 75 காசு

காதம் 2 | ஜூன் 1984 | சுவடு 18


# பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு கண்டனம்

## சிறிலங்கா அரசுக்கு எதிராக உலக அபிப்பிராயம் எழுகிறது

1979ல் அமுலாக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை தொடர்ந்து பல ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறைப்பிடிக்கப்பட்டும், சித்திரவதை செய்யப் பட்டும், கொல்லப்பட்டும் வருகின்ற சேதி தொடர்கதை யாகிக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. பயங்கர வாத தடைச் சட்டத்தை கண்டித்து சர்வதேச மன்னிப்பு சபையும், சர்வதேச சட்ட நிபுணர் சபையும், அதன் இங்கி லாந்து கிளையான 'நீதி'யும் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இவ் அறிக்கையில் பயங்கரவாத தடைச் சட்டமே இலங்கை யில் நடைபெறும் மனிதாபிமான சிதைவுக்கு காரண மென்றும், ஒரு நாகரிக நாட்டின் சட்ட புத்தகத்திற்கு இது மாபெரும் இழுக்கு என்றும் குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்காவில் பபலோ நகரிலுள்ள அரச பல்கலைக்கழக பேராசிரியர் வேர்ஜினியா ஏ. லியரியும், இங்கிலாந்தின் 'நீதி' செயலதிபர் திரு. போல் சீகட்டும் பயங்கரவாத தடை சட்டத்தை 1967ல் தென் ஆபிரிக்காவின் மனிதாபிமானமற்ற பயங்கரவாதச் சட்டத்துடன் ஒப்பிட்டு, இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதை சர்வதேச சட்ட நிபுணர் சபைக்கு சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

1982ம் ஆண்டின் சர்வதேச மன்னிப்பு சபை தன் அறிக் கையில் பின்வருமாறு கூறுகிறது.

"நாம் ஆராய்ந்த பல விடயங்களில் தமிழர்கள் இச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட பொழுதெல்லாம் கைது செய்த இராணுவ காவல்படையினர் தாம் யாரென்று அறிமுகப்படுத்தாது கைது செய்ததை அவதானித்தோம், கைதிகளை பிடிக்க இவர்கள் உத்தரவு கொண்டு செல்லவில்லை கைதிகளின் சுற்றத்தார்க்கும் அறிவிக்கவில்லை. கைதிகளை உறவினர் சந்திக்கவும் அனுமதிக்கவில்லை. கைதிகள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரியப்படுத்த வில்லை. கைதிகள் ஏன் பிடிக்கப்பட்டார்கள் என்பதையும் அறிவிக்கவில்லை.

இராணுவ முகாம்களிலும் காவல் நிலையங்களிலும் தமிழ் கைதிகள் மீண்டும் மீண்டும் நெடுநேரமாக அடிக்கப் பட்டிருக்கிறார்கள். விசேசமாக உள்ளங்காலில் தாக்கப்பட் டுள்ளார்கள். தலைகீழாக தூக்கப்பட்டு அடிக்கப்பட்டிருக் கின்றனர். கை நகங்களுக்குள்ளும், கால் நகங்களுக்குள்ளும் ஊசிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. ஆண் உறுப்பில் மிளகாய் தூள் பூசப்பட்டிருக்கிறது. பலநாள் பட்டினி போடப்பட்ட பின் உப்புடனும், மிளகாயுடனும் உணவு கொடுக்கப்பட் டிருக்கிறது. ஆண் உறுப்புகள் எரிக்கப்பட்டும், நசுக்கப்பட்டு மிருக்கின்றன.

தமிழ் கைதிகளை சட்டத்தரணிகளும், உறவினரும் சந்திக்க வசதிகள் வழங்கப்படவில்லை. நாம் சந்தித்த பல கைதிகள் பல காலமாய் யாருடனும் பேசமுடியாமல் தனி அறைகளில் வைக்கப்பட்டிருந்தனர். 4 மாதங்களுக்கும் பல சந்தர்ப்பங்களில் 9 மாதங்களுக்கு அதிகமாக கைதிகளை சட்ட தரணிகள் காண இடம் அளிக்கப்படவில்லை.

மேலும் 1981 மேமாதம் இரு காவலர்கள் சுடப்பட்டதை அடுத்து பல தமிழர்கள் காவல்படையினரால் வழியில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். இன்னும் பலர் யூன் மாதம் 3ம் 4ம் திகதிகளில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். சர்வதேச மன்னிப்பு சபை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப் பட்ட நான்கு தமிழர்களின் விபரங்களை சேகரித்திருக்கிறது. இதில் இருவர் இறந்துவிட்டார்கள் என விடப்பட்டு தப்பி வந்து எமக்கு விபரம் தந்தவர்களாகும்.

(7 ஆம் பக்கம் பார்க்க

# இந்துவின் பார்வையில்

EPRLFஇன் இராணுவப் பிரிவினர் எனக் கூறிக் கொண் டவர்கள், அமெரிக்க தம்பதிகளை அவர்களது யாழ்ப்பாண இல்லத்திலிருந்து கடத்தியதும் பின்னர் விடுதலை செய்யப் பட்டதும் மகிழ்ச்சிக்குரியது. சிறிலங்காவின் நெருக்கடி நிலைமைகளில் இந்தியாவின் உதவி நம்பத்தகுந்ததும் வேண் டியதும் என்பதற்கு இச்சம்பவம் புதியதொரு சான்றாக விளங்குகின்றது. இந்தியாவின் மனப்பூர்வமான உதவியை அமெரிக்க அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதில் கபட நோக்கு ஒன்றினையும் சுமத்தாமல், கொழும்பு அரசு ஏற் றுக் கொள்ள வேண்டும் என இந்தியா எதிர் பார்க்கின்றது. இலங்கையின் தேசிய பாதுகாப்பு அமைச்சரான திரு. அத்துலத் முதலி, அலென் தம்பதிகள் பாக்குநீரிணையினூ டாக தமிழ் நாட்டிற்குக் கடத்தப்பட்டு விட்டார்கள் என மீண்டும் மீண்டும் பகிரங்கமாக ஹேஷ்யம் கூறியது சுத்த பைத்தியக்காரத்தனம் என்பதையும் இச்சம்பவம் காட்டுகின் றது. உண்மைத்தரவுகளுக்கு மதிப்பு கொடுக்காமல், இச் சம்பவத்தை இந்தியாவுடனும் தமிழ் நாட்டுடனும் தொடர்பு படுத்திக் கூறியது அவரின் கபடத் தனத்தையே சுட்டிக் காட்டுகின்றது. யாழ்பாணத்திலும் மற்றும் தமிழ்ப் பகுதிகளிலும் ஏற்படும் நிலைமைகளை எவ்வாறு கொழும்பு கையாள்கின்றது என்பது இங்கு அம்பலமாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, தமது கண்களைக் கட்டிவிட்டு, காரில் செல்

(7 ம் பக்கம் பார்க்க)

## அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிவோம்!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது நோக்கு

**நண்பர்களை பகைவர்களை இனம் கண்டு**
**நாளைய உலகை நாம் படைப்போம்**

தமிழீழ விடுதலையை முன்னெடுத்து, ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு போராடும் அமைப்புக்களை 'பெடியள்' 'தலைமைக்கு ஆசைப்படும் கற்றுக் குட்டிகள், 'ஆளை ஆள் சுட்டுக் கொல்லும் முரடர்கள்' என்றெல்லாம் கிண்டல் பேசிய மூத்த தலைவர்கள் இன்று அதைக் காட்டிலும் பொறுப்புணர்ச்சியற்ற அறிக்கைகள் மூலம் தமிழீழ விடுதலை போராட்டத்தை மாசு படுத்த ஆரம்பித்துள்ளார்கள். சி. ஐ. ஏ. உளவாளிகள் என சந்தேகிக்கப்பட்ட அமெரிக்க தம்பதிகளை E. P. R. L .F. ஐ சேர்ந்த P. L. A. கடந்தமாதம் பணய-கைதிகளாக கடத்தி வைத்தபொழுது, தான் இந்த தலைவர்களின் முகமூடி கிழிந்து உண்மை சொரூபத்தை காணக்கூடியதாக இருந்தது.

ஒரு விடுதலை இராணுவம் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அமெரிக்க சி. ஐ. ஏ, சிறிலங்கா அரசு ஆகியவற்றை கதிகலங்கச் செய்து, தமிழீழ விடுதலை போராட்டத்தை முன்னெடுப்பது நியாயமானதே. ஆனால் P. L, A யின் அரசியல் தந்திரோபாய குறைபாடுகள் காரணமாக தமிழக, இந்திய அரசுகள் அனுவசியமாக இப் பணய கடத்தலில் சம்பந்தப் படுத்தப்பட்டுவிட்டது. இதனால் இம்முயற்சியில் P.L A. முழு வெற்றியைபெற முடியாமல் போனது துர்பலமே. ஆயினும் தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் இது ஒரு முன்னேற்றகரமான கட்டம் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

இப் பணய கட்த்தலை கண்டித்து தமிழக, இந்திய அரசுகள் அறிக்கை விடுத்ததையும் இதனை சமாதானப்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகளையும், சிறிலங்காவுடனான இராஜ தந்திர அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆனால் அதே சமயம் த. வி. கூ தலைவர் அமிர்தலிங்கம், சந்திரகாசனை பின்னணியில் கொண்டு இயங்கும் த. ஈ. வி. அ. சேர்ந்த கோவை மகேசன், தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ேருருக்கு இப்பணய கடத்தலை கண்டிப்பதற்கு என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்பதுதான் புரியவில்லை.

பல்வேறு பிரிவுகளாக சிதறுண்டிருந்தாலும் தமிழீழ விடுதலை என்ற ஒரே இலட்சியத்திற்காக போராடுகிறோம் என்ற உண்மை இந்த மூத்த தலைவர்களுக்கே இன்னமும் வரவில்லையென்றால் மற்றவர்கள் எம்மாத்திரம்.

எமது எதிரி சிறிலங்கா அரசேயன்றி போராடும் தமிழீழ விடுதலை அமைப்புக்கள் அல்ல என்பதில் நாம் எப்பொழுதும் உறுதியாக இருக்க வேண்டும். பொறுப்புணர்ச்சியற்ற அனுவசிய போட்டி பொறாமைகள் தமிழீழ மக்களின் அவநம்பிக்கையையும் ஆதரவையும் சிதறடிக்கவே செய்யும் என்பதில் நாம்விழிப்போடிருக்க வேண்டும்.

இப்பணய கடத்தல் சிறையில் வாடும் 20 தமிழீழ போராளிகளை விடுவிக்கும் நோக்கத்தை குறியாக கொண்டிருந்தது. இப் பணய கடத்தலை கண்டித்த தலைவர்களுக்கோ இது பற்றி எவ்வித அக்கறையும் இருக்கவில்லை. அவர்கள் கவனம் எல்லாம் அமெரிக்க உளவாளி தம்பதிகளின் நலன் சார்ந்ததாக இருந்ததை தெளிவாகவே காண முடிந்தது. அவர்கள் தமிழீழ விடுதலை போராட்டத்தை முன்னெடுப்பதாக கூறிக் கொள்ளும் அதே வேளையில் தம் அமெரிக்க ஏஜெண்டுகளின் கண்ணில் சிறு துரும்புதானும் விழாமல் பார்த்துக் கொள்வார்கள். அமெரிக்க ஏகாதிபத்திய அடாவடித்தன ஜனநாயகத்தில் இவர்களுக்கு அந்த அளவிற்கு விசுவாசம்,

இதே அளவு விசுவாசமும் நம்பிக்கையும் இவர்களுக்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிலும் இல்லாமலில்லை. அதனால் தான் மாவட்ட சபை அதிகாரத்திலும் கூடிய வேறெதையும் ஜே. ஆர். வழங்கப்போவதில்லை என்று தெரிந்த பின்னும் இந்த மூத்த தலைவர்கள் அவர் காலை விடாது கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். காரணம் கேட்டாலோ ஜே. ஆரின் தனிப்பட்ட நேர்மையிலும் நாணயத்திலும் பெருமதிப்பாம். அவர் தமிழ் மக்களை ஒருபொழுதும் கைவிடமாட்டாராம். மந்திரி சபையில் பிரேமதாசா, காமினி திசாநாயகா, சிறில் மத்தியூ போன்ற இனவாதிகளை சமாளித்து ஜே. ஆர். எப்படியும் தமிழ் மக்களுக்கு விமோசனம் வழங்குவாராம்.

'தம் சொந்த தலைவிதியை நமது கரங்களில் எடுத்துக் கொள்ளாத எந்த சமூகமும் உருப்படாது' என்ற உண்மையை உணராத இந்த தலைவர்களுக்கு ஒரு வார்த்தை.

1942ல் இருந்து இலங்கை அரசியலில் மிக மோசமான வகுப்புவாதியாக செயல்பட்டவர் ஜே. ஆர்தான். சியரட்ட பத்திரிகையில் அவர் கக்கிய வகுப்புவாத பிரச்சாரம் 1958 கண்டிபாதயாத்திரை என்பன இன்றும் சிங்கள மக்களின் இதயத்தில் சுடர்விட்டு பிரகாசிக்கிறது.

தமிழீழ போராளிகளை நசுக்க 'இஸ்ரேல்' படைகளின் உதவியையும் இப்பொழுது ஜே. ஆர். வரவழைத்துவிட்டார். இந்த இஸ்ரேல் படைகள்தான் 1983ன் பெய்ரூட் படுகொலைகள் மூலம் இன அழிப்பில் உலக புகழ் பெற்றவர்கள். தமிழ் மக்களுக்கு எதிராக மிக மோசமான நடவடிக்கைகளை ஜே. ஆர். எடுத்து வரும் இவ் வேளையில் அவரது தனிப்பட்ட நேர்மையில் நம்பிக்கை கொள்வதற்கு பதிலாக தமிழீழவிடுதலை அமைப்புக்களின் செயல்களில் நம்பிக்கை கொள்ளுங்கள். அவர்களை ஆதரியுங்கள். பிழைகளை நயமாக கண்டியுங்கள். தமிழ் மக்கள் இதைத்தான் எதிர் பார்க்கின்றார்கள்

# "பேயரசு செய்தால்...

சிறிலங்கா இராணுவ முகாம்களில் சித்திரவதைக்குள்ளாகும் எமது தோழர்கள் சிலர் அனுப்பிய இரகசிய தகவல்களை கீழே தருகின்றோம். வெலிக்கடை சிறைச்சாலையில் 53 தமிழீழப் போராளிகள் குரூரமாக கொலை செய்த சிறிலங்கா அரசிற்கு, இந்த விவகாரம் எல்லாம் சாதாரணமானதுதான். ஆனால் தமிழீழ இலட்சியம் ஒன்றையே குறியாக கொண்ட தமிழீழப் போராளிகளுக்கு இந்த செய்திகள் இரத்தத்தை சூடாக்கி, தொடர்ந்தும் முன்னேற ஆதர்சனமாகவே இருக்கட்டும்.

"...... இராணுவ முகாம்களில் எம்மை தடிகளாலும் இரும்பு கம்பிகளாலும், துப்பாக்கி பின்புறத்தாலும் அடிக்கடி தாக்குவார்கள். தாக்கும்பொழுது உடம்பில் வெளிக் காயங்கள் ஏற்படாதபடி தாக்குகின்றார்கள். எமக்கு கொடுக்கப்படும் உணவுக்குள் "ஆசனிக்" என்னும் நஞ்சுக்கு சமமான "கிறிஸ்டல்" படிவம் போன்ற ஒரு நஞ்சு பொருள் கலக்கப்படுகிறது, குடிக்கும் நீரிலும் ஒருவகை உப்பு பதார்த்தம் கலந்து கொடுக்கப்படுகிறது. இதை குடிக்கவோ உண்ணவோ மறுக்கும்பொழுது கொலைசெய்யப்போவதாக மிரட்டி சித்திரவதை செய்கின்றனர். இந்த உணவுகளையும் பானங்களையும் உட்கொள்ளுபவர்கள் நோய்வாய்ப்பட்டு நாளடைவில் 3 மாதம் முதல் 2 வருடங்களுள் இறக்கும் நிலைமை அடைவர் என்று வேறு வகையில் நாம் அறிந்தோம்,

"சந்தேகத்திற்குரிய இளைஞர்கள் சுட்டோ, அடித்தோ கொல்லப்படுகின்றனர். பின் இராணுவ நிலையத்தில் உள்ள கிடங்குகளில் (ஒல்லாந்தரால் கட்டப்பட்ட மலசலகூட கிடங்குகள்) போட்டு ரயர்களால் இரவோடு இரவாக

(3-ம் பக்கம் பார்க்க)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ★ கேள்வி பதில் ★

தமிழ் சிங்கள ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டுப் போராடுவதன் மூலமே தமிழ் மக்களின் உரிமைகளை பெறமுடியும் என்றகூட்டாட்சி அடிப்படையிலேயே இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்றும் சில கம்யூனிஸ்டுகள் கூறுவது பற்றி தங்கள் கருத்து என்ன?

**கி. பரமநாதன்**

ஆமாம் சில கம்யூனிஸ்டுகள் இவ்வாறுதான் கூறுகின்றனர். இன்றைய இலங்கை அரசியலின் ஜனநாயக சக்திகளின் அவல நிலையையும் சிங்கள பேரின வாதத்தின் கொடூரத்தையும் ஆராயும்பொழுது இப் பிரச்சனை தெளிவடையும்.

இலங்கை முழுவதும் நாடு தழுவிய வகையில் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு ஏற்படுவது சிறந்த முறை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த வாய்ப்பில் இருந்து நாம் விலகி வரலாற்றின் மிக நீண்ட தூரத்திற்கு சென்றுவிட்டோம் என்பது யதார்த்தமாகும். சில கம்யூனிஸ்டுகள் மார்க்சியத்தை ஓர் இயங்கியல் பார்வையின்றி வரையறுத்த தீர்மானங்கள், கட்டுப்பாடுகள், நிர்ணயித்த போராட்டங்களினூடாக சமூகத்தை மதிப்பீடு செய்வதினாலேயே இத்த கைய முடிவிற்கு வருகின்றனர்.

தமிழீழ போராட்டம் வர்க்கப் போராட்டத்திற்கு எதிரானதோ அல்லது அதனை -மழுங்கடிப்பதோ அல்ல. மூன்றும் உலக நாடுகளின் குறைவிருத்தி பொருளாதாரம் நீண்ட காலமாக சுரண்டப்படும் அடிமை நாடுகளாக இருந்த அதன் வரலாற்று தன்மை என்பன வர்க்கப் போராட்டங்களை புதிய போக்கில் கொண்டு செல்கின்றன. தேசிய—இன போராட்டங்களினூடாக வளர்ந்து செல்லும் வர்க்க போராட்ட வடிவங்களை சில கம்யூனிஸ்டுகள் ஜீரணிக்க தவறுகின்றன.

இன்று சிறிலங்கா அரசின் மிக மோசமான சிங்களப் பேரினவாத கொடூரத்தை உயர்த்துணரக் கூடியதாக இருக்கின்றது. இனவாதம் பாராளுமன்றம், மந்திரி சபைகளில் சர்வ சாதாரணமாக பேசப்படுவது அநாகரிக அரசியலாக கருதப்படுவதில்லை. சிங்கள பேரினவாதம் சிங்கள முற்போக்கு சக்திகளால் வெல்லப்பட முடியாத தன்மை நிலவுகிறது. உண்மையான மார்க்சிஸ்டுகளும் சிங்கள பேரினவாதத்திற்கு அஞ்சி தமிழ் மக்கள் உரிமை தொடர்பான கருத்துகளை அதன் முன்வைக்க பயப்படுகின்றனர்கள். ஏனென்றால் சிங்கள பேரினவாதம் ஓர் பரந்த வெகுஜன அடித்தளத்தை கொண்டிருக்கிறது. சிறிய, மத்தியதர வர்த்தகர்கள், சிறிய பண்ட உற்பத்தியாளர்கள், மத்தியதர புத்திசாலிகள், மாணவர்கள் மட்டுமின்றி தொழிலாளவர்க்கத்தின் பெரும்பகுதியையும் சிங்கள பேரினவாதம் மிகவும் பலமாக பற்றியுள்ளது. இந்த யதார்த்த நிலையை கருத்தில் கொள்ளும்பொழுது தமிழ் சிங்கள ஜனநாயக சக்திகளின் ஐக்கியப்பட்ட போராட்டம் பற்றிய கருத்து அழகான சுலோகமாக தென்பட்டாலும் நடைமுறையில் சாத்தியமில்லாததே.

மேலும் இன்று இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாக பின்தள்ளப்பட்டுள்ள வேளையில் அதிலிருந்து விமோசனம் காணும் நடவடிக்கைகளுக்கு மாறாக ஜே. ஆர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் செல்வதையே குறியாகக் கொண்டு இயங்குகின்றார். இதற்கு எதிராக திரண்டெழுந்த முற்போக்கு சக்திகளின் போராட்டங்கள் யாவும் சட்டரீதியாகவும் சட்டத்தின் புறம்பானவகையிலும் கொடூரமாக அடக்கப்பட்டுவிட்டது. இன்று சிங்கள முற்போக்கு சக்திகள் எச்சிறு போராட்டத்தை தானும் ஜே.ஆர். அரசுக்கு எதிராக நடத்த முடியாத கையறு நிலையில் இருப்பதை நாம் மனம் கொள்ளவேண்டும். இந்நிலையில் சிங்கள பேரினவாதம், அமெரிக்க ஏகாதிபத்தியம் என்பவற்றிற்கு எதிரான போராட்டத்தை தமிழீழ போராளிகள் மாத்திரமே நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

## சிந்தையில் நிறைந்த சிவகுமாரா

சிந்தையில் நிறைந்த சிங்கத்தமிழா சிவகுமாரா  
எந்தையின் நினைவில் என்றும் ஒளிச் சுடராய்  
விந்தைகள் புரிந்து விளைநிலம் அமைத்தாய்  
மந்தைகளான எம்மை மேய்ப்பனாய்  
வந்துகாத்தாய்

அன்று நீ தொடங்கிய விடுதலை போர்தனை  
இன்று நாம் அணிதிரண்டு அமுலாக்கி நின்றோம்  
என்றும் உம்பணியை தொடர்ந்திட்டோமீழமதை  
வென்றெடுக்க வீரனாய் சென்று வழிகாட்டினாய்.  
அஞ்சிநாம் இருந்து நலிந்தது போதுமென்று  
அஞ்சா நெஞ்சினனாய் அடக்குமுறை தகர்த்திடவே  
மிஞ்சி எம்முயிர்தான் போதுமென்று துணிவுடனே  
வெஞ்சினந்து வெள்ளமென சென்று வழி  
காட்டினாயோ.

நித்தம் நித்தம் நாம் அழிந்து போய்விடாமல்  
பித்தர்தம் கூட்டத்தை மிரளவைத்து ஒழித்திடவே  
ரத்தம் சிந்தி ரணகளத்தில் உடல்படியினும்  
சுதந்திரத்தை நிலைநிறுத்த போரிடுவோம் உன்  
வழியில்.

10-வது நினைவுதினம்-05-06-84

**திருமதி. ஜெ. ஜென்னி**  
திருக்கோணமலை-2

## மார்க்ஸ் இறந்தபோது எங்கெல்ஸ் குறிப்பிட்டது

ஒரு கேந்திரம் போய்விட்டது. பிரசித்தி பெற்றவர்களின் சிறு மேதைகளின் ஏன போலிகளின் கை கூட கட்டவிழ்த்து நிற்கும் இறுதியான வெற்றி நிட்சயம். ஆனால் தவிர்க்க முடியாத வளைவு சுளிவுகள், தற்காலிக ஸ்தல திரிபுகள் எல்லாம் முன்னைவிட அதிகரிக்கும். நல்லது, இயற்கை நாம் சமாளித்தே தீரவேண்டும், இல்லையேல் நாம் எதற்காக வாழ்கிறோம்.

(2-ம் பக்க தொடர்சி)

எரிக்கின்றனர். இவை இராணுவ முகாம்களில் அடிக்கடி இடம்பெறுகின்றன. சில நாட்களில் இரவு 1 மணிக்கு பின்னர் துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்கிறது.சிறிது நேரத்தின் பின் முகாமின் ஒரு புறத்திலிருந்து பிரேதம் எரியும் துர்நாற்றத்துடன் புகை எழுவதை அவதானிக்கமுடிகிறது...... ..'' (பழைய டயர்கள் பல கொழும்பில் இருந்தும் காங்கேசன் துறை சிமேந்து தொழிற்சாலையிலிருந்தும் இராணுவ முகாம்களுக்குள் கொண்டுசெல்லப்பட்டது யாவரும் அறிந்ததே)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ★ நகர கெரில்லாக்கள் ★

(கார்லோஸ் மாரிகாலின் நகர கெரில்லாக்களின் சிறு புத்தகம் உலகத்திலுள்ள நகர்புறக் கெரில்லாக்களின் கைநூலாக உள்ளது. இப்புத்தகம் எவ்வாறு ஒரு போராளி செயல்படவேண்டும் எனபதை பயன்தரும் வகையில் தெளி வாக்குகின்றது)

## நகரபுறக் கெரில்லாவின் விசேட குணங்களும் அவன் செயல்பாடுகளும்:-

ஒரு நகர்புறக் கெரில்லாவின் முக்கிய குணுதிசயங்கள் அவனுடைய துணிவையும் தீர்மானம் எடுக்கும் தன்மையை யும் பொறுத்ததாகும். அவன் ஒரு சிறந்த தந்திரவாதி யாகவும், வைத்தகுறி தவருது சுடக்கூடியவனுயும் இருத்தல் வேண்டும். நகர்புற கெரில்லா தனது ஆயுதங்களினதும், தளபாடங்களினதும், மருந்துகளினதும் போதாமையை நிவர்த்தி செய்யும் முகமாக மிகவும் சிக்கனமாக இருத்தல் வேண்டும்.

நகர்புறக் கெரில்லாக்களின் ஆயுதங்கள் எதிரியி னுடையதை பார்க்கிலும் தரம் குறைந்ததாகும். எனினும் உண்மையில் அவனின் மனத்திடம், திறமை, என்பவற்றில் மிகவும் உயர்ந்தவனுக இருக்கின்முன். அவனில் உண்மை யான உயர்வே அவனே உயர்ந்த நிலேக்குக் கொண்டு செல் கின்றது. இந்த உயர்வே அவனே வாழவும் வைக்கிறது, இதனுல் அவன் தன் போராட்டத்தைத் திறமையான முறை யில் சரிவரச் செய்யக் கூடியதாக உள்ளது. நகர்புற கெரில்லாவானவன் ஒரு வர்த்தக நிலேயத்திலுள்ள வியாபாரி யாயோ ஒரு மேடை நடிகனுகவோ இருக்க முடியாது. நகர்புறக் கெரில்லாக்களாயினும் சரி, கிராமப்புறக் கெரில் லாக்களாயினும் சரி தாம் எடுத்துக் கொண்ட சத்தியப் பிராமணத்திற்குப் பங்கம் வராமல் தன் போராட்டத்தை மேற்கொள்வது அவசியமாகும். அதற்காக எத்தனே துன்பத்தையும் பொறுத்துக் கொள்ளக் கூடிய மனவலி மையைக் கொண்டிருத்தல் வேண்டும். இத்துன்பங்களேத் தாங்கிக் கொள்ள முடியாத கெரில்லா வீரன் தன் சத்தி யத்தை கைவிட்டவனாகவே கருதப்படுவான். பொறுமை சகிப்புத்தன்மை, என்பன ஒவ்வொரு கெரில்லா வீரனிடமும் இருக்கவேண்டிய மிகச்சிறந்த குணாம்சமாகும். இவை இல்லாதவிடத்து அவன் ஒரு தலைசிறந்த கெரில்லாப் போர் வீரனாக கருதப்படமாட்டான்.

ஒரு நகர்புறக் கெரில்லா மக்களோடு மக்களாக வாழக் கூடியவனுகவும் சாதாரண நகர வாழ்க்கையிலிருந்து மாறு பட்ட வித்தியாசமுடையவனுய்க் காட்டிக் கொள்ளாமல் இருக்கவேண்டும். ஒரு நகர்புறக் கெரில்லா தனது சொந்த உழைப்பினுல் வரும் வருமானத்தில் தான் சீவிக்கவேண்டும். அதன் இனங்காணப்பட்டால் அல்லது காவல் படையினரால் வேடப்பட்டால் அல்லது சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டால் சில சமயங்களில் தலேமறைவாக மறைந்து வாழவேண்டி ஏற்படும். இப்படிப்பட்ட சூழ்நிலேயில் ஒரு நகர்புறக் கெரில்லா தன் நிலேமையை யாருக்குமே வெளியிட முடி யாது. அவன் நடவடிக்கைகள் பற்றி அறிந்திருக்க வேண்டி யது அவன் அங்கம் வகிக்கும் புரட்சிகர இயக்கம் மாத்திரமே.

நகர்ப்புறக் கெரில்லாவிற்கு எல்லாவற்றையும் அவதானி க்கக்கூடிய தன்மை எப்பொழுதும் இருக்கவேண்டும். எல்லா விடயங்களைப்பற்றியும் அறிந்திருக்க வேண்டும். முக்கிய மாக எதிரியின் ஒவ்வொரு அசைவுகள் பற்றியும், தான் இருக்கும் நிலே, இடம் பற்றியும் அறிந்திருத்தல் அவசியம். நகர்புறக் கெரில்லாவின் முக்கியமான நிலேமை அவன் ஆயுதங்களுடன் வாழும் மனிதன் என்பதாகும். இதனுல் தனது சொந்தத் தொழிலைபல காலம் அடையாளம் காணா மல் செய்யமுடியாத, இக்கட்டான நிலையை அவன் எதிர் நோக்கவேண்டியுள்ளான்.

## தொழில் நுட்பரீதியாக ஒரு நகர்புற கெரில்லாவைத் தயரர் செய்தல்:

ஒருவன் தொழில் நுட்ப ஆயத்தங்களைச் செய்யாமல் ஒரு நகர்புறக் கெரில்லாவாக இயங்க முடியாது. தொழில் நுட்பத் தயாரிப்பானது பின்வருவனவற்றில் தங்கியுள்ளது:-

1. தன்னுடைய உடலேப் பயிற்சிமூலம் எப்பொழுதும் தயா ரான நிலேயில் வைத்திருத்தல்.




கடந்த ஏப்ரல் மாதம் சிறிலங்கா இராணுவத்தினரால் உயிருடன் எரிக்கப்பட்ட ஒருவரின் சடலம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2. எல்லாத் தொழில்களிலும் குறிப்பாக மிக அவசியமான காரியங்கள் செய்வதற்கான அறிவைப் பெற்றிருத்தல்.

3. ஒரு நகர்ப்புறக் கெரில்லா தொடர்ச்சியாகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தால்தான் அவனுல் எந்நேரமும் போராடக்கூடிய திறமையைக் கொண்டிருக்க முடியும். போராடும் முறைகளை முறைப்படி கற்காமல் சிறந்த போர்வீரனுக அவனுல் இயங்க முடியாது. இக்காரணத்திற்காகவே அவன் பலவிதமான தாக்குதல்கள், தற்பாதுகாப்பு முறைகளை அறிந்திருத்தல் வேண்டும்.

காரோட்டுதல், விமானம் ஒட்டுதல், படகு, மோட்டார் படகு ஓட்டுதல், போன்றவற்றைத் திறமையுடன் பழகி வைத்திருந்தாலும், அதே சமயம் அவைகளின் பாகங்கள் இயக்கங்கள் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். அதேபோல் ரேடியோ, தொலைபேசி, மின் இயக்கங்கள் என்பவற்றையும் தெளிவுறத் தெரிந்திருப்பதும் அவசியம். மேலும் சில அளவைப் படங்களைப் புரிந்து கொள்ளவும், நூல்களைக் கணிக்கவும், படங்களைக் கீறவும், திட்டங்களை வரையவும், வெவ்வேறு கேத்திரக் கணித உபகரணங்களைப் பயன்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும். இரசாயனத்தைப் பற்றிய அறிவும் நிறங்களைப் பயன்படுத்தும் முறையும், கடிதங்களின் பிரதியை எடுக்கும் முறையும், கையெழுத்துக் கலைகளில் தேர்ச்சியும் ஒரு நகர்ப்புறக் கெரில்லாவின் தொழில் நுட்ப அறிவில் முக்கிய தகைமைகளாகும். ஏனெனில் அவன் வாழும் சமுதாயத்தை மாற்றுவதற்கு முன்பு அச் சமுதாயத்தில் மறைந்து வாழ்வதும் அவசியமாகிறது. வைத்திய துறையில் அவனுக்கு மருந்துக்களை பற்றிய அறிவும், தாதி மருத்துவருக்குரிய அடிப்படை சிகிச்சை, அவசர சிகிச்சை முதலியன பற்றிய அறிவும் இருத்தல் வேண்டும். ஆயுதங்களை பொறுத்தவரை அதை கையாள்வது மாத்திரமின்றி ஆயுதங்களை பாதுகாக்கவும், பராமரிக்கவும், திருத்தவும் தெரிந்திருக்க வேண்டும். மேலும் சிறு ஆயுதங்களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சிறிய பட்டறையை ரகசியமாக உருவாக்கும் ஆற்றலுள்ளவராய் இருப்பதும் அவசியமாகும்.

உலோகப் பொருட்கள், இயந்திர lathe பற்றிய அறிவு நகர்ப்புற கெரில்லாவிற்கு வீட்டிலேயே ஆயுதங்களை உற்பத்தி செய்யும் திறமையை உருவாக்கும் இதனுல் இத்தகைய அறிவு அவனுக்கு கற்பிக்கப்படவேண்டும்.

நகர்புற கெரில்லாவின் ஆயுதங்களும் அவற்றை வைத்திருக்கும் திறமையுமே அவனது சுடுதிறமை எனலாம். நவீன ஆயுதங்களை பயன்படுத்துவதன் மூலமும், தன்னிடம் ஏற்கனவேயுள்ள ஆயுதங்களை முன்னேறுவதன் மூலம் நகர்புற கெரில்லா தன் போராட்டத்தின் நடைமுறை தந்திரங்களை மாற்றியமைக்கலாம்.

ஒரு நகர்புற கெரில்லாவின் சுடும் திறமையே அவன் செயல்பாட்டை வலுப்படுத்துகின்றது. சாதாரண போர் முறையில் தூரத்தில் நின்றே சுடலாம். ஆனுல் கெரில்லா போராட்டம் நெருங்கி நின்று நடைபெறுவதனுல் திடீரென்று வேகமாக, குறிதவருது சுட கற்றிருத்தல் வேண்டும். தனது அழிவை தவிர்க்க எப்பொழுதும் கெரில்லா முதலிலேயே சுடவேண்டும். அதே சமயம் ரவைகளை அதிகம் வீணுக்கவும் கூடாது. சில வேளைகளில் எதிரி கெரில்லாவின் ரவைகள் தீருமட்டும் காத்திருந்து பின் தாக்குதலை ஆரம்பிக்கலாம். நகர்புற கொரில்லாவிடம் எப்பொழுதும் சொற்ப ரவைகளே இருக்கும் என்பதையும், மேலதிகமாக ரவைகளை பெற முடியாதென்பதையும் மனம்கொள்ள வேண்டும்.

---

சிறு காரியங்களை செய்வதற்கு ஒருபோதும் பின்நிற்காதீர்கள் ஏனெனில் சிறு காரியங்களிலிருந்துதான் பெரிய காரியங்களைச் சாதிப்போம்.

—லெனின்

# நகர்ப்புற கெரில்லாவின் ஆயுதங்கள்

ஆயுதங்கள் இலகுவானதாகவும் இலகுவில் பெறவோ மாற்றவோ, எதிரியிடமிருந்து கைபற்றவோ, வாங்கவோ அந்த இடத்தில் தயாரிக்க கூடியதாகவோ இருக்கவேண்டும். இலகுவான ஆயுதங்கள் பாவிக்கவும், கொண்டு செல்லவும் வசதியானது, தன்னியக்கி துப்பாக்கிகளை பாவிக்கும் பொழுது ரவைகளை வீணுக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் அத்துடன் ஒரே வகை துப்பாக்கிகளை உற்பத்தி செய்வதன் மூலம் ஒரேவகை ரவைகளை பாவிக்கலாம்.

கைக்குண்டு, புகைக்குண்டுகள் நகர்ப்புற கெரில்லா பின் வாங்குவதற்கும் மறைவதற்கும் பயன்படுத்தலாம். நீண்ட குளாய் ஆயுதங்கள் கொண்டு செல்வதற்கு கடினமாக இருப்பதாலும், பிறரின் அவதானிப்புக்குள்ளாவதாலும் அதனை தவிர்ப்பதே நல்லது.

எதிரியோடு கெரில்லா நேருக்குநேர் மோதிக் கொண்டிருக்கும்பொழுது அடிக்கடி ஓரிடத்திலிருந்து இன்னேர் இடத்திற்கு மாறிக் கொண்டிருக்கவேண்டும். ஒரு நகர்ப்புற கெரில்லாவின் வாழ்வு குறிதவருது சுடுவதிலும், திறமையாக ஆயுதங்களை கையாள்வதிலும், சுடப்படாது தப்புவதிலும் தங்கியுள்ளது. எனவே சுடுவதில் தேர்ச்சி பெற்று வருவது நகர்ப்புற கெரில்லாவின் தன்னியல்பான தன்மையாக மாற வேண்டும்.

# ★ உஸ்....ரகசியம்

''தமிழீழ விடுதலை தவிர தரணிதனில் வேறொன்றை நாட மாட்டோம்''

என்று சங்கநாதம் செய்தார்கள் தமிழர் விடுதலை கூட்டணி தலைவர்கள். இன்றோ வட்டமேசை மாநாட்டில் தமது தலைமைக்கு பங்கம் வராமல் இருக்க ஜே. ஆருடன் பேரம் பேசிப்பார்க்க சென்றுள்ளார்கள்.

மிக மிக சோதனை காலம் த. வி. கூ. தலைவர்களுக்கு. பாராளுமன்ற பதவி பறிபோய் பல நாட்களாகிவிட்டது. ஆனுலும் சுகமான வாழ்வு மறுக்கப்படவில்லை. தமிழ் நாட்டில் இலவச வீடுகளில் குடியிருந்து மனைவியோடும், பிள்ளைகளோடும் மகிழ்ந்திருக்கும் இத்தியாக செம்மல்கள் இடையிடையே பொதுப்பணிகளிலும் ஈடுபடுவார்கள். தமிழீழத்தில் இவர்கள் செய்த பணி தமிழகத்திற்கு வந்தால் நின்று போய்விடும். இதோ! தமிழீழத்தில் இருந்து அகதிகளாக வந்த மாணவர்களுக்கு தமிழக கல்லூரிகளில் புலமை பரிசில் கிடைக்க சிபார்சு செய்திருக்கிருர்கள். இவர்கள் சிபார்சின் பேரில் கல்லூரிகளில் அனுமதியும் புலமை பரிசிலும் பெற்ற மாணவர்கள் விபரத்தை கீழே தருகின்றோம்

விடுதலைக்கு இத்தலைவர்கள் தமிழ் நாட்டில் உழைக்கின்ருர்களோ என்னவோ, ஆனுல் தத்தம் வீட்டிற்கும் குடும்பத்திற்கும் செய்யும் சேவையை தமிழ் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்

1. மலர்விழி (திருமதி. பகீரதன்)
   திரு. அ. அமிர்தலிங்கத்தின் மருமகள்
2. மைதிலி நவரட்டினம்
   திரு. V. N. நவரட்டினத்தின் (சாவகச்சேரி) மகள்
3. மகேஸ்வரன் (மலேசிய பிரசை)
   திரு. அ. அமிர்தலிங்கத்தின் நெருங்கிய உறவினர்.
4. தர்மாவதி விஸ்வநாதன்
   முன்னுள் யாழ்மேயர் இராஜா விஸ்வநாதனின் மகள்.
5. ரகுராஜ்
   திரு. அ. அமிர்தலிங்கத்தின் நெருங்கிய உறவினர்.
6. சிறிஹறிதாசன்
   திரு. இரா. சம்பந்தனின் நெருங்கிய உறவினர்.
7. வள்ளுவன் — திரு. அ. அமிர்தலிங்கத்தின் மருமகன்

(இவர் சிறிலங்காவில் விஞ்ஞான பட்டப்படிப்பு கற்றவர் தமிழகத்தில் பொறியியல் துறையில் கல்வி பயிலுகிருர்.)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவர்களை என்னவென்பது?

எரிதணல்கூட அவர்களது வீரத்தின் முன்னால் மண்டியிட்டு வணங்கியது. மலைகள்கூட ஒருகணம் சிலிர்ந்து நடுங்கியது.

ஒரு பாலஸ்தீனியனின் வீரத்தை என்னவென்பது?

கண்முன்னால் நடந்த காட்சி!

நீர் இல்லை. ஆகாரம் இல்லை. வைத்திய சாலைகள் தரைமட்டம். சுற்றி வளைக்கப்பட்டு ஒரு சிறு பரப்புக்குள் அடைக்கப்பட்டு ஆயிரமாயிரம் பெண்டிர், வயோதியர், குழந்தைகள் மீது இலட்சக்கணக்கான குண்டுகளை பொழிந்து தள்ளிய இரத்தவெறி பிடித்த இஸ்ரவேல் ஆணவத்துடன் கேட்டது. ''நீ சரணடைகிறாயா?''. இவன் மறுமொழியாக தன் ரைபிளை உயர்த்திப் பிடித்து, சினத்தீ கண்களில் எரிமலையாக கொப்பளிக்க, கேட்டவனின் உடலை கூறுபோட துடிக்கின்றான்.

டாங்கிகள் அவனை நசுக்கி தள்ள முன்னேறுகின்றன. அவனோ தன் வெற்று தோளினால் தாக்கி தகர்க்கின்றான். குண்டுகள் அவன் நெஞ்சை துளைக்கின்றன. அவன் வழியும் குருதியை ஏந்தி சபதமேற்று கூறுகிறான். ''எல்லாம் எனது மக்களுக்காக'' கையில் கிடைப்பது இரும்போ துரும்போ எதுவானாலும் அதைக் கொண்டு தாயகத்தை மீட்க இமயமாக எழுங்கள்.

அமெரிக்க உதவியின் பின்னணியில் ஐந்து நாட்களில் மின்னல் வீச்சுத் தாக்குதலின் மூலமாக பாலஸ்தீனியரை நிர்மூலமாக்கிவிடலாம் என்று மனப்பால் குடித்த இரத்தவெறி இஸ்ரவேலியரின் முகத்தில் பாலஸ்தீனியனின் ஐந்து வயது குழந்தைகூட தனது சின்னம் சிறு கரங்களால் படு பயங்கரமாக ஓங்கி அறைந்து அவர்கள் மூக்கை சிதறடித்தது

தாக்குதல் தொடங்கி அரைமணி நேரத்தில் மாத்திரம், உறுமிக் கொண்டு வந்த இஸ்ரவேல் டாங்கிகள் இருபத்தைந்து எதற்கும் லாயக்கற்றதாக்கி தவிடு பொடியாக்கி பாலஸ்தீனிய போராளி. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட பின்பு இதோ இவர்களின் புறப்பாடு பெய்றூட்டில் இருந்து—விரக்தியை தரவில்லை.

உலக அரங்கில் பெய்றூட்டில் இருந்து இவர்களின புறப்பாடு மேலும் காதலையும் பாசத்தையுமே தருகிறது. இவர்களின் புறப்பாடு ஒரு மனிதாபிமானம். இவர்களின் புறப்பாடு ஒரு வேங்கையின் பதுங்கல்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் இரத்த வெறி பிடித்த இஸ்ரவேல் பெய்றூட்டில் நடத்திய பயங்கர படுகொலைகள் பாலஸ்தீனிய போராளியின் மனதை தளரச் செய்யவில்லை. அவர்கள் போராட்டம் தொடர்ந்த கதையாகவே இருக்கின்றது.

இரத்தவெறி பிடித்த இஸ்ரவேல் தமிழீழ போராட்டத்தை முறியடிக்க இதோ இங்கு வரப்போகிறது.


நாம் இதற்கு அஞ்சப்போவதில்லை. பாலஸ்தீனியர்கள் அன்று காண்பித்த வீரம் நிறைந்த போராட்டத்தை மீண்டும் உலக அரங்கில் நிறைவேற்ற நாம் தயாராகவே இருக்கின்றோம்.

''எல்லாம் எமது மக்களுக்காக''

இந்த எதிர்ப்பை முறியடிப்பதற்கு எமது ஒற்றுமையே எங்கள் பலம் இனியும் தாமதியாது ஐக்கியப்படுவோம். அதன் பின் எப்பொழுதும் எதிரி தூசுதான்.

பிற்போக்குவாதிகள் பெரும் பாராங்கற்களைத் தூக்குவது தமது காலில் போடத்தான்.

சினப்பழமொழி




கடல் படையால் சுட்டுக் கொல்லப்பட்டு கரையில் ஒதுங்கிய சடலங்கள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முருங்கனில் ஒரு முதிரை

மன்னார் மாவட்டத்தில் முருங்கனை பிறப்பிடமாக கொண்டவர் தோழர் நகுலநாதன் (சாந்தன்) தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் மன்னார் மாவட்ட முக்கிய பொறுப்புக்களை சுமந்தவர் தமிழீழ விடுதலை போராட்டத்திற்கு ஆயுதத்தை மாத்திரம் நம்பாமல் பரந்துபட்ட மக்களது ஆதரவையும் பெற வேண்டுமென்று சக தோழர்களுக்கு வலியுறுத்திவந்தவர்.

'புதியபாதை'யை விற்பதுடன் மாத்திரம் தன் கடமை முடிந்துவிட்டதென்று கருதாமல் அதன் கருத்துக்களை மக்களிடம் வலியுறுத்துவதையும் தன் கடமையாக ஏற்றுக் கொண்டு செயல்பட்டவர்.

7-3-84ல் இவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டார். 12-3-84ல் இராணுவம் இவரை சுட்டுக்கொன்றது.

கொள்கைப் பற்றும் திடமான நெஞ்சுறுதியும் படைத்த நகுலநாதன் தமிழீழ போராட்டத்திற்கு மிக சொற்பகாலமே பணியாற்றும் வாய்ப்பு பெற்றிருந்தாராயினும் அக் குறுகிய காலத்தில் மன்னார் மாவட்டத்தில் நெஞ்சுரம் படைத்த பல தோழர்களை உருவாக்கியிருந்தார். 'ஒரு போராளி ஒன்றில் மரணமடைவான் அல்லது வெற்றி கொள்வான்' என்று அடிக்கடி கூறும் நகுலநாதன் மரணத்தை அடைந்து அனைவரையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டார். இனி வெற்றியை அடைய அயராது உழைக்கும் தோழர்கட்கு அவர் வாழ்வு ஆதங்கமாக விளங்கட்டும்.

நீ உயிரிழப்பதைத்தான்
அவர்கள்
தியாகமென சொல்லித்
திரிகிறார்கள்
நீ என்றைக்கு
உன் முழு வலிமையோடு
நிமிர்ந்தெழுந்து
அவர்கள்
முகத்தில் அறைந்தாற்போல
இப்படிக் கேட்கப் போகிறாய்
''ஏன் நாங்கள்
போரிட்டுக்
கொண்டிருக்கிறோம்?''
(மயோக்வாங்கியின் கவிதை வரியிலிருந்து)

நடப்பிலுள்ளவை சித்தரித்தால் மட்டும் போதாது விரும்பத்தக்க வருங்காலத்தையும் அதனை அடையக்கூடிய வழிகளையும் ஓர் எழுத்தாளன் சித்தரிக்க வேண்டும். சமூக நிகழ்ச்சிகளை வகைப்படுத்த வேண்டும். நடப்பில் காணப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளிலிருந்து முக்கியமானவற்றை தேர்ந்தெடுத்து அவற்றை பொருளாகக் கொண்டு இலக்கியம் படைப்பதே படைப்பாளியின் பொறுப்பாகும்.

—மார்க்கின் சோர்ச்சி

இலட்சியங்கள் எப்போதும் மக்களின் தினசரி வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு வர்க்கத்தின் சாதாரண பிரச்சனையோடு இணைந்திராத எந்த ஒரு மிக உயர்ந்த குறிக்கோளும் செப்புக்காசின் மதிப்பைக்கூட பெறுவதில்லை.

—லெனின்

1-ம் பக்கத் தொடர்ச்சி

'இலங்கையில் இன எதிர்ப்பும், வன்செயல்களும்' என்ற நூலில் பேராசிரியர் வேர்ஜினியா லியரி பின்வருமாறு எழுதுகின்றார்.

இலங்கையில் பயங்கரவாத தடை சட்டம் மனிதாபிமான முறையில் மிகவும் கண்டிக்கப்படவேண்டியது. இச் சட்டத்தால் எந்தவகையான முன்னேற்றமும் ஏற்படவில்லை. 1974ல் இச் சட்டம் அமுலாக்கப்பட்ட பின்பு பயங்கரவாதம் கூடியிருக்கிறதேயல்லாமல் குறையவில்லை.

காவல்படையின் அடக்குமுறைகள் வன்செயலை குறைக்கவில்லை, அதிகரித்திருக்கிறது. இவ்விதமே பலவந்த அடக்குமுறையால் பயங்கரவாதத்தை தடுக்க எத்தனித்த மற்றய நாடுகளிலும் தோல்வியே கண்டிருக்கிறது. பயங்கரவாதத்தின் அடிப்படை காரணங்களை கண்டுபிடித்து அகற்றுவதே பயன் தரும்.

திரு. போல் சீகட் பின்வருமாறு கூறுகிறார். இச் சட்டம் தனிமனித உரிமைகளை பறிக்கிறது. சர்வதேச ஒப்பந்தங்களை மீறி இலங்கை அரசு இயங்கிவருகிறது இப்பொழுது தெளிவாக தெரிகிறது.பயங்கரவாத தடைச் சட்டம் சட்டப்புத்தகத்தில் இருக்கும்வரை இலங்கை மனித உரிமைகளை மீறி இயங்குகிறதென்பதே உண்மை. இச்சட்டம் உருவாக்கப்பட்ட குறிக்கோள்களும் காட்டப்படவில்லை. பயங்கரவாதிகளை பிடித்து நீதியை நிலைநாட்ட இச்சட்டம் உதவவில்லை. பலரை இச்சட்டத்தின் கீழ் கைது செய்து துன்புறுத்திய பின்பும் இப்பொழுது அதன் பயனற்ற தன்மையையே இலங்கை அதிகாரிகள் வெளிப்படையாக காண்கிறார்கள். வெகுவிரைவில் இச்சட்டம் அகற்றப்படும் என்று எண்ணுகிறேன் என்று குறிப்பிட்டார்.

(இந்துவின் பார்வையில் முதற்பக்கத் தொடர்ச்சி)

லும்போது, 20நிமிடத்துக்கான தூரத்தில் உள்ள யாழ்ப்பாண வீடு ஒன்றிலேயே வைக்கப்பட்டதாக அலென் தம்பதிகள் கூறினர் தமது கோரிக்கை சம்பந்தமான பிரசுரங்களை வெகு சகஜமாக அரசு அதிகாரிகளுக்கு, கடத்தல்காரர்கள் அனுப்பிவைத்துக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாண நகரத்தில் பிஷப் வீட்டிற்கு இவர்களை ஒரு ஜீப்பில் கொண்டு போய் விட்டிருக்கிறார்கள். இவ்வாறு கடத்தல் காரர்கள் சுதந்திரமாகத் திரியும் அதே வேளையில் பாதுகாப்புப் படையினர் இவர்களைத் தேடும் வேட்டையில் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள் எனும் செய்தியும் கேள்விக்குரியதே.

பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றி இந்தியா தொடர்ந்தும், கடுமையாக இருக்க வேண்டிய அதே நேரத்தில், கொழும்பு சாட்டிக் கொண்டிருக்கும் பொய்க் குற்றங்களுக்காக இந்தியா தன்னைக் காத்துக் கொள்ளும் ரீதியில் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இந்தியாவுக்கெதிராகப் பகைமை உணர்ச்சிகளைக் கக்கிக் கொண்டிருக்கும் இலங்கை அதிகாரிகளுக்குத் தகுந்த எச்சரிக்கையை இந்தியா விடுக்கும் காலம் வந்து விட்டது. இலங்கையில் இருந்து ஏறத்தாள 30,000 பேர்கள் சும்மா வேடிக்கைக் காகவா வந்து புகுந்துள்ளனர். தமது வீடுவாசல்களையும் தொழில்களையும்விட்டு இங்கு வந்துவிடும்படி இந்தியா ஏதும் விசேட விருந்து வைத்து அழைத்ததா? தமிழினத்தை அழிப்பதற்கு தொடர்ச்சியாக நடந்த தாக்குதல்களின்றும் தப்பவே இங்கு வந்துள்ளனர். இலங்கை அரசுக்கு இத்தாக்குதல்களில் பெரும் பங்கு உண்டு. இவற்றை எல்லாம் கண்டும் காணாதது போல் இந்தியா இருந்துவிட முடியாது.

இந்து 17-5-84
தலையங்கத்தின் ஒரு பகுதி

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூடாரத்தில் நுழைந்த ஒட்டகம்

அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரவேல் நாட்டின் நலன்களை கவனிப்பதற்கான பிரிவு ஒன்று தொடங்குவதற்கு சிறிலங்கா அரசு அனுமதித்துள்ளது. இந்த அனுமதி அமெரிக்க அரசின் தூண்டுதலாலேயே கொடுக்கப்பட்டதென்பது வெளிப்படை.

இஸ்ரேல் உலகநாடுகள் பெரும்பாலானவற்றின் எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்ட நாடு. 1968ல் ஜெருசலமின் அல் அக்சா பள்ளிவாசலையும், முஸ்லீம்களின் புனித பூமியான பாலஸ்தீனத்தையும் கைப்பற்றி வைத்திருக்கும் நாடாகும் 1982ல் பெய்ரூட் படுகொலைகளின் மூலம் இன அடக்கு முறையில் புதிய சகாப்தத்தை தோற்றுவித்த நாடு இஸ்ரவேல்.

இஸ்ரவேலின் இந்த மனிதாபிமானமற்ற அடாவடித் தனங்களை கண்டிக்கும் முகமாக இந்தியாவின் தலைமையிலான அணிசேரா நாடுகள் உட்பட ஏராளமான நாடுகள் குறிப்பாக அரபு நாடுகள் இஸ்ரவெலுடனுன இராஜ தந்திர உறவுகளை துண்டித்துள்ளன.

1970ல் சிறிமா அரசாங்கம் இஸ்ரவேல் அதிகாரிகளை வெளியேற்றி அந் நாட்டுடனுன தொடர்புகளை துண்டித்தது அனைவரும் அறிந்ததே. இன்று தமிழீழ விடுதலை போராளிகளை அடக்குவதற்கு சிறிலங்கா இராணுவத்திற்கு இராணுவ பயிற்சி கொடுக்கும் முகமாகவே இஸ்ரவெலுடன் இந்த கூட்டு ஏற்பட்டிருப்பது வெளிப்படை. மனித உரிமைகளை மீறிய நாட்டுடன் சிறிலங்காவின் இத்தகைய தொடர்பு ஆச்சரியத்திற்குரியதல்ல ஆனுல் ஜே. ஆர் அரசே இந்நாட்டு முஸ்லீம்களின் உணர்வுகளை மதித்து இயங்குகின்றதென்று தம்பட்டம் அடிக்கும் போக்குவரவு அமைச்சர் முகமதுவும், வெளிநாட்டு அமைச்சர் ஹமீதுவும் இனி என்ன கூறப் போகிருர்கள்.

# தடைகளைத் தாண்டி ஒலிக்கின்றது தமிழீழத்தின் குரல்

ஸ்ரீலங்கா அரசின் இடையூறுகளையும் தடைகளையும் வெற்றிகரமாக முறியடித்து—தமிழீழ மக்களின் விடுதலைக் குரலாக—தமிழீழ வரலாற்றையும் செய்திகளையும்—புரட்சிக் கருத்துக்களையும் தாங்கி 4 அலைவரிசைகளில் வான் அலைகளில் தவழ்ந்து வருகிறது! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகார பூர்வ ஒலிபரப்பான தமிழீழத்தின் குரல்—

**ஒலிப்பரப்பு அலைவரிசைகள்**

| | |
|---|---|
| ஒலிபரப்பு I | 90M-3500KHZ |
| | 41M-7300KHZ |
| ஒலிபரப்பு II | 41M-7080KHZ |
| ஒலிபரப்பு III | 41M-7120KHZ |

குறிப்பு: ஏதாவது ஒரு அலைவரிசையில் எமது ஒலி பரப்புத் தடைப்பட்டால் உடனடியாக உங்கள் வானொலி மீட்டரை எமது அடுத்த அலைவரிசைக்கு சிறிது நகர்த்தி எமது ஒலிபரப்பை தெளிவாகக் கேட்கலாம்.

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| **சனி, ஞாயிறு காலை** | 7-00—8-00 மணிவரை | தமிழ் ஒலிபரப்பு |
| | 8-00—8-30 மணிவரை | ஆங்கில ஒலிபரப்பு |
| | 8-30—900 மணிவரை | சிங்கள ஒலிபரப்பு |
| **சனி, ஞாயிறு மாலை** | 4-00—5-00 மணிவரை | தமிழ் ஒலிபரப்பு |
| | 5-00—5-30 மணிவரை | ஆங்கில ஒலிபரப்பு |
| | 5-30—6-00 மணிவரை | சிங்கள ஒலிபரப்பு |

# அநாகரீக தேசப்பிதாக்கள்

சிறிலங்கா அரசின் ஜனுதிபதி ஜே. ஆர். ஜேவர்த தாம் சிங்கள மொழியிலும் பௌத்த மதத்திலும் ஆழ் பற்று வைத்திருப்பதாக அடிக்கடி புலப்படுத்துவார் உண் யில் அவரது தேசிய பற்றெல்லாம் அமெரிக்க ஏகாதி தியத்தியத்திற்கு உள்ளடங்கியதே.

சிங்கள தலைவர்கள் எல்லோருமே இப்படி ஏகாதிபத் நாடுகளின் அடிவருடிகளாக இருந்து கொண்டே தான் தேசப்பற்றை வெளிப்படுத்தி வந்திருக்கிருர்கள். உதாரண திற்கு வீரம்மிகு தேசப்பற்று நிறைந்த பேச்சுகளினு செயல்களினுலும், சிங்கள மக்கள் மனதில் முதலிடம் பிடி திருப்பவர் அநகரீக தர்மபாலா.

அநாகரீக தர்மபாலா சிங்களத்திற்கும், பௌத்த திற்கும் முதலிடம் அளிக்கப்பட வேண்டும் என்று பிரிட் சாருக்கு எதிராக போராடியவராம் இவர் 1914ல் சட்ட அதிபருக்கு எழுதிய கடிதம் அவரது பிரிட்டிஸ் விரோ போக்கை எப்படி புலப்படுத்துகின்றது பாருங்கள்.

"நான் பதவியாளர்களை என் கட்டுரையில் விமர்சிப்ப உண்மை. ஆனுல் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எனது விசுவாச கல் போன்று உறுதியானது. அரசர் மீதுள்ள விசுவா உணர்வுகளை நான்" தவருது வெளிப்படுத்தியிருக்கிறேன். ஆனுல் நான் எனது மதத்தையும் சிங்கள இனத்தையு நேசிக்கிறேன். எனது சந்தோசம் அவர்களின் நலன்க லேயே தங்கியுள்ளது.

அநாகரிகமாக தர்மபாலா பிரிட்டிஷ் யுத்த நிதிக்கு பண உதவி வழங்கியது பற்றி குறிப்பிட்டு நம் மீது கருணை காட்டும்படி எழுதியகடிதத்தில் இடம்பெறும் வாசகத்தை பாருங்கள்.

கல்கத்தாவில் இருந்து இலங்கை தேசாதிபதியின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் இது

நான் மிகுதியாக துன்புறுத்தப்பட்டபோதும் யுத்த நிதிக்கு ஆயிரம் ரூபா கொடுத்ததின் மூலமும் எனது பணத் தையெல்லாம் யுத்தப்பத்திரங்களிலும் M. B. சங்கத்தின் பத்திரங்களிலும்—எல்லாமாக 32,000 ரூபா முதலீடு செய் வதன் மூலமும் பிட்டிஷ் அரசாங்கத்திற்கு என் கடமையைச் செய்துள்ளேன். சிறிலங்காவின் விடுதலைக்குப் போராடிய தேசிய பிதா இவர் தானும்.

ஆதாரம் - Anagarika Dharmapala
Return to Riphteousness
Edited by Ananda Gurge
The Government press, Colombo 1965

# நாம் அதற்கு பொறுப்பல்ல

யாழ்நகரில் தமிழீழ விடுதலைப் புலிகளை அநாகரீகமாக தூற்றி சில சுவரொட்டிகள் எமது கழகத்தின் பெயரால் ஒட்டப் பட்டிருந்தன. இதுபற்றி 29-4-84 வீரகேசரியிலும் செய்தி பிரசுரமாயிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நாம் முரண்பட்ட கருத்துடையவர்கள் என்பது உண்மையே. ஆயினும் இத்தகைய பிரச்சாரத்தின் மூலம் தமிழீழ மக்கள் விடுதலை கழகம்' தன்னை வளர்த்துக்கொள்ள ஒருபொழுதும் விரும்பியது கிடையாது.

இந்த சுவரொட்டிகளுக்கு நாம் பொறுப்பல்ல என்பதை பொது மக்களுக்கு அறிய தருகின்றேம்.

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்ப்புரட்சியாளரினதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகிறது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணுக்காது எல்லோருக்கும் படிக்க கொடுக்கவும்.

வெளியீடு செய்தி-மக்கள் தொடர்பு திணைக்களம்
தமிழீழ மக்கள் விடுதலை கழகம்

PEOPLE'S LIBERATION ORGANIZOTION
OF THAMILEELAM (FRANCE BRANCH)
Tel:-238 39 72

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்